# 02 படைப்புகளும் பொறுப்புள்ள குடும்பங்களும்

**வாசிப்போம்**

**தொடக்கநூல் *2:15***
**எசாயா *66:9***
**யோபு *33:6***
**எபேசியர் *3:14-15***

12. ஆலய வீதி,
புத்தளம்

*அன்பு நண்பா!*

*தேவ ஆசீர்வாதம் பெருகுவதாக!*

*உமது கடிதம் கிடைத்தது. யாவும் வாசித்தறிந்தேன். உடன் பதில் எழுதாததற்கு மன்னிக்கவும்.*

*நான், ஏற்கனவே உமக்கு எழுதியிருந்தபடி நமது திருச்சபையால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த, 'பசுமை இயக்கமும் கிறிஸ்தவக் குடும்பங்களும்' என்னும் பாசறைக்கு, குடும்பத்தினருடன் சென்றிருந்தேன். இயற்கை அழகு நிறைந்த மனரம்மியமான மலைநாட்டுச் சூழலில் 3 நாட்களுக்கு இப்பாசறை நடைபெற்றது, இன்னும் பல கிறிஸ்தவக் குடும்பங்கள் இதில் கலந்துகொண்டன.*

*இப்பாசறை, "பொறுப்புணர்வுடன் படைப்புக்களைப் பராமரிக்கும் போது, குடும்பங்கள் மன நிறைவுடன் வாழ முடியும்" என்னும் தொனிப்பொருளைக் கொண்டிருந்தது. தற்போதைய பாரிய பிரச்சினையான புவி மாசடைதலாலும், புவி வெப்பமடைவதால் கடவுளின் படைப்புக்கள் எதிர்நோக்கும் அழிவினின்று அவற்றை பாதுகாக்க குடும்பங்கள் முன்வருவது, கடவுளின் எதிர்பார்ப்பு என்பதையும் நாம் உணர்ந்து கொண்டோம். எமது திருச்சபைக் குருவானவரும், வேறு பல சிறப்பு பேச்சாளர்களுக்கும் இப்பாசறையில் கலந்துகொண்டு, திருவிவிலிய அடிப்படையில் இவற்றை எமக்கு விளக்கிக் கூறினார்கள்.*



*இதில் பங்குபற்றிய நாங்கள், குழுக்களாக இயங்கி படைப்பு பராமரிப்பு குடும்பங்களின் கடமையென்றும், இதனைப் பிறருடன் பகிர்ந்து விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவது குடும்பங்களின் பணி எனவும் தீர்மானம் எடுத்தோம்.*

*அங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகளின் முக்கிய கருத்துக்களை உமக்கும் அறிவிப்பது பயனுடையதாக இருக்கும் என்பதால், நான் தயாரித்த அறிக்கையின் ஒரு பிரதியை இத்துடன் இணைத்துள்ளேன். நீர் வாசித்துப் பயனடைவதுடன், உமது ஆலயக் குடும்ப அங்கத்தவருடன் சேர்ந்து படைப்புக்களைப் பராமரிக்கும் முயற்சியில் ஈடுபடலாம். இதன் மூலம், இவற்றைப் படைத்த கடவுளுக்கு அன்பையும், நன்றியையும் செலுத்த முடியும். இதைப்பற்றிய உமது அபிப்பிராயத்தை மறு கடிதத்தில் தெரிவிக்கவும். நீரும் உமது குடும்பமும் பொறுப்புள்ள படைப்புப் பராமரிப்புப் பணியாளர்களாக செயற்பட, கடவுள் உங்களை ஆசீர்வதிப்பாராக.*

*இப்படிக்கு நண்பன்,*
*போல்*

## சபைப் போதகரின் செய்தியின் சுருக்கம்:

### பாசறையின் நோக்கம்:

'பசுமை இயக்கமும் - குடும்பங்களும்' பாசறையில் கலந்து கொள்ளும் குடும்ப அங்கத்தவர்கள் யாவருக்கும் கடவுளின் ஆசீர்வாதம் பெருகுவதாக.



நீங்கள் தொலைத்தொடர்பு சாதனங்களினூடாக நீர், நிலம், வளி மாசடைதல், தாவரங்களும், விலங்குகளும் அழிக்கப்படுவதன் விளைவாக புவி எதிர்நோக்கும் ஆபத்துக்கள் குறித்து கேள்விப்பட்டிருப்பீர்கள். இவை ஏன் ஏற்படுகின்றன? இவற்றைக் குறித்து நாம் ஏன் கவலைப்பட வேண்டுமென நீங்கள் சிந்திக்கலாம். இவை யாவும் மனிதர் சுயநலமாக, பொறுப்பற்ற படைப்புப் பராமரிப்பாளராகச் செயல்படுவதன் விளைவாகும்.

இப்பாசறையின் நோக்கம், திருவிவிலிய அடிப்படையில், கிறிஸ்தவ குடும்பங்கள் சூழலைப் பாதுகாத்து, கடவுள் படைத்த இப்புவியின் பாதுகாவலராகச் செயற்படுவதற்கு வழி காட்டுதல் ஆகும். இதன்மூலம் குடும்பங்கள், படைப்பின் கடவுளுக்கு நன்றியையும் அன்பையும் வெளிப்படத்தலாம்.


இலவச விநியோகத்திற்காக

## குடும்பங்களை ஏற்படுத்தியவர் கடவுள்



குடும்பங்கள் இப்பாரிய பணிக்கு ஏன் தெரிவுசெய்யப்பட்டன என்னும் கேள்வி நமது மனதில் எழலாம். குடும்பங்கள் சமூகத்தின் அலகுகளாகும். இக்குடும்பங்கள் அனைத்தையும் உருவாக்கியவர் கடவுளே. படைப்புகளில் உன்னதப் படைப்பான மனிதனை, தன் உருவிலும் சாயலிலும் கடவுள் படைத்து, ''ஏதேன் தோட்டதைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு கொண்டுவந்து குடியிருக்கச் செய்தார்.'' தொடக்கநூல் 2:15

பின்பு ஆண்டவராகிய கடவுள் 'மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று, அவனுக்குத் தகுந்த துணையை உண்டாக்குவேன்.' (தொடக்கநூல் 2:18) எனக்கூறி, மனிதனின் விலா எலும்பிலிருந்து பெண்ணை உருவாக்கி, அவனுக்கு மனைவியாகக் கொடுத்து, ஒரு குடும்பத்தை ஏற்படுத்தினார். குடும்பத்தை உருவாக்கிய கடவுள், குடும்பங்களின் பெருக்கத்திற்கும், தொடர்படைப்புக்கும் காரணகர்த்தா ஆவார்.

'பேறு காலத்தை ஏற்படுத்திய நான், மகப்பேற்றைத் தடைசெய்வேனோ? என்கிறார் ஆண்டவர். மகப்பேற்றுக்குக் காரணமான நான் கருப்பையை அடைத்துவிடுவேனா? என்கிறார் உங்கள் கடவுள்.'

ஏசாயா 66: 9

## கடவுளின் எதிர்பார்ப்பு



கடவுள் தாம் உருவாக்கிய குடும்பத்திற்கு ஆசி வழங்கி கூறியதாவது,

'பலுகிப் பெருகி, மண்ணுலகை நிரப்புங்கள் அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள் கடல் மீன்கள், வானத்துப் பறைவைகள், நிலத்தில் ஊர்ந்து உயிர்வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள்.' தொடக்கநூல் 1:28





குடும்பங்கள் தம் வாழ்வுக்காக படைப்புகளைப் பாவிக்கின்றன. இவ்வாறு பயன்படுத்தும் போது எதிர்கால சந்ததியினரின் நலனை நோக்காகக் கொண்டு படைப்புகளைப் பொறுப்புடன் பராமரிக்கவேண்டும். இது கடவுளின் எதிர்பார்ப்பும் நோக்கமும் ஆகும். படைப்புகளைக் கீழ்ப்படுத்த அதிகாரம் கொடுத்த கடவுள் மனிதன் குடும்பமாகத் தனது கட்டளைக்கு கீழ்ப்படியவும்; படைப்பு பராமரிப்பு பணியில் ஈடுபடவேண்டும் எனவும் விரும்புகிறார்.

## கடவுளிடம் மன்றாடுவோம்

கடவுள் ஆரம்பித்த எதையுமே பூரணமற்றதாக நிறுத்திவிடுவதில்லை. அவற்றை அழகாகவும், முழுமையாகவும் செய்து முடிப்பார். இப்பொழுதும் சமூகத்தை உருவாக்கும் குடும்பங்களுக்காகத் தான் உண்டாக்கிய படைப்புகள் அழிந்து விடாது பாதுகாப்பது கடவுளின் விருப்பமாகும். இப்படைப்பு பராமரிப்பு பணிக்கு குடும்பங்கள் உரிய பங்களிப்பு செய்யவேண்டுமென்று நம்மை அழைக்கிறார். திருவிவிலியத்தின் அடிப்படையில் இதனை நாம் செயற்படுத்துவது எப்படி? பவுலடியார் எபேசியருக்கு எழுதிய திருமுகத்தில் கூறியதுபோல, ‘‘விண்ணுலகிலும், மண்ணுலகிலும் உள்ள ஒவ்வொரு குடும்பமும் உண்மையிலேயே குடும்பமாய் விளங்குவதற்குக் காரணமாய் இருக்கிற தந்தையிடம் நான் மண்டியிட்டு வேண்டுகிறேன்’’ (எபேசியர் 3:14,15) நாமும் பொறுப்பான படைப்புப் பணியாளர் குடும்பங்களாகச் செயற்பட கடவுளிடம் ஞானத்தை வேண்டி நிற்போம்.

## சிறப்புப் பேச்சாளரின் உரை - படைப்புப் பாதுகாப்பின் முக்கியத்துவம்

**நாம் குடும்பமாக கடவுளின் படைப்பை ஏன் பாதுகாக்க வேண்டும்?**



1. ‘‘விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை கட்புலனாகுபவை, கட்புலனாகாதவை ................. ...................................... அனைத்தும் அவர் வழியாய் அவருக்காகப் படைக்கப்பட்டன’’ (கொலோசேயர் 1:16)

   சகல படைப்புக்களும் கடவுளுடையவை. இப்புவியில் நாம் வாழப்போகும் குறுகிய காலத்தில் அவற்றைப் பயன்படுத்தி, பாதுகாத்து பின்வரும் சந்ததிக்கு விட்டுச் செல்ல நமக்கு கடனாகக் கொடுக்கப்பட்டுள்ளது. படைப்பு, பராமரிப்பு கடவுள் நம்மிடம் எதிர்பார்க்கும் பெரும் பொறுப்பாகும்.

2. ‘‘சிலுவையில் இயேசு சிந்திய இரத்தத்தால் அமைதியை நிலைநாட்டவும், விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை அனைத்தையும் அவர் வழியே தம்மோடு ஒப்புரவாக்கவும் கடவுள் திருவுளம் கொண்டார்’’
(கொலோசேயர் 1:20)
மனிதர் உட்பட எல்லா படைப்புக்களையும் கடவுளுடன் ஒப்புரவாக்குவதற்கே இயேசுக்கிறிஸ்து சிலுவையில் மரித்தார். ஆகவே நாமும் படைப்புகளைப் பேணி ஒப்புரவாக்கில் பணியில் பங்கேற்க வேண்டும்.

3. படைப்புக்களைப் பராமரிப்பதன் மூலம், கடவுளை நாம் நேசிக்கிறோம், அத்துடன் கடவுள் நேசிக்கின்றவற்றையும் நாம் நேசிக்கின்றோம். இதன் மூலம் இறைவனை நேசி பிறனை நேசி என்ற பிராதன கட்டளை நிறைவேறுகிறது. கடவுளால் நேசிக்கப்படும் இளைப்பு நோயுள்ள. குழந்தையை, நாம் நேசிக்கிறோம் என்று கூறிக்கொண்டு, அக்குழந்தை சுவாசிக்கும் வளியை நச்சு வாயுக்களால் நிரப்புவது அன்பு காட்டும் செயலாகுமோ!

4. படைப்பின் சமநிலை ஒழுங்கு தகர்க்கப்படல் வறியவர்களையும் ஏனையோரையும் அதிகம் பாதிக்கிறது. நாம் சமூகத்தில் பலம் குறைந்தவர்களாகக் காணப்படும் ஏழைகளைப் பராமரித்து உதவ அழைக்கப்பட்டிருக்கிறோம்.
(மத்தேயு 25:37-40)
கிறிஸ்தவ குடும்பங்கள் படைப்பை பாதுகாக்க வேண்டுமென்பது கடவுளின் எதிர்பார்ப்பாகும். இது கடவுளையும், எமது அயலவரையும் நேசிக்கும் செயற்பாடாகும்.

## விழிப்புணர்வை ஏற்படுத்துவோம்

மனிதவாழ்வு பொருளாதாரத்துடன் மிகத்தொடர்புடையது. ஆதிகாலத்தில் மனிதர் படைப்புக்களுடன் நேரடியாகத் தம் தேவைகளைப் பெறத் தங்கியிருந்தனர். விவசாயம், விலங்கு வளர்ப்பு, போன்றவற்றில் ஈடுபட்டு படைப்புக்களுக்கு நேரடி பாதுகாப்பு, பராமரிப்பு, தொடர்விருத்தி வாய்ப்புக்களை வழங்கினர். தொழில் நுட்பம், கணனியுகமாகியவற்றால் படைப்புக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் குறைந்து காணப்படுகிறது. தற்போது, அபிவிருத்திக்கு அளவற்ற முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம், படைப்புகளின் விருத்தியும், காப்பும் குறைந்து, அழிவும், சூழற்சமநிலைத் தகர்வும் ஏற்படுகிறது.

நமது குடும்பங்களின் எதிர்காலத்திற்கு நாம் அதிகளவு முக்கியத்துவம் கொடுக்கிறோம். பிள்ளைகளின் ஆரோக்கியமான வாழ்க்கைக்குத் தேவையான

உணவுகளைத் தெரிவு செய்கிறோம். அவர்களின் உடல்ரீதியான தேவை போலவே, ஆன்மீகத் தேவைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து வழி நடத்துகிறோம். அதேபோல, பொறுப்புணர்வுடன், படைப்புக்களைப் பராமரிக்கும் போதுதான் எதிர்காலச் சந்ததியினர், சுகநலத்துடன் நிறைவான வாழ்க்கை வாழமுடியும் என்னும் உண்மையைக் கூறி அவர்களை வழிநடத்தவேண்டும்.


ஆகவே, படைப்புக்களைப் பராமரிப்பது தொடர்பான அறம் சார்ந்த நடவடிக்கைகளைப் பற்றி, குடும்பங்களாகக் கலந்துரையாடி, பிரார்த்தனையில் ஈடுபடவேண்டும். இது நமது அன்றாட மன்றாடலாகவும் அமைய வேண்டும். நமது சமூகத்திலிருக்கும் ஏனைய குடும்பங்களுக்கும் இதனை எடுத்துக்கூறி விழிப்புணர்வை ஏற்படுத்துதல் வேண்டும். இதனால், நாம் கடவுள் எதிர்பார்க்கும் படைப்புப் - பராமரிப்பில் இணைந்து கடவுளின் சித்தத்தை நிறைவேற்றலாம்.

## குடும்பமாகச் செயற்படுவோம்



குடும்பங்களின் வாழ்க்கை முறையிலும் சூழல் பாதிப்படையலாம். நாம் கடவுளுடன் சரியான தொடர்பு வைக்க வேண்டுமானால், கடவுள் தான் படைத்தவற்றைப் பராமரித்துப் பாதுகாப்பதுபோல, நாமும் அவற்றைப் பாதுகாக்கவேண்டும். சுற்றாடலுக்குப் பாதகமான செயற்பாடுகளைத் தவிர்த்து மரநடுகை, விலங்கு விருத்தி, சூழல் பராமரிப்பு போன்றவற்றில் குடும்பங்கள் ஈடுபடல் வேண்டும். ஒரு பொறுப்பான குடும்பத்தின் வாழ்க்கை முறைக்கான தெரிவுகள், (சக்திநுகர்வு, கழிவகற்றல், மீள்சுழற்சி முறைகள்) அத்தோடு ஒரு நுகர்வோராய், தொழிலாளியாய், முதலீட்டாளராய் எடுக்கும் தீர்மானங்கள் யாவும் படைப்பு பராமரிப்பை மையமாகக் கொண்டிருத்தல் வேண்டும். இவ்வாறு எல்லாக் குடும்பங்களும் செயல்படுமாயின் சமுதாயமே அழிவினின்று பாதுகாக்கப்படும்.





## தீர்மானிப்போம்

- ☞ சமுதாயத்தின் அடிப்படை அலகான நமது குடும்பங்கள் ஒன்றாய்ச் சேர்ந்து, படைப்புகளின் அழிவைத் தடுப்பதில் பொறுப்புடன் ஈடுபடுவோம்.
- ☞ கடவுளின் எதிர்பார்ப்பான படைப்பு - பராமரிப்பு குடும்பங்களின் கடமை என்பதை நடைமுறைப்படுத்தி பிறருடன் பகிர்ந்து கொள்வோம்.



## நினைவில் வைத்திருப்போம்

- சமுதாயத்தின் அடிப்படை அலகான குடும்பத்தை உருவாக்கியவர் கடவுள்.
- குடும்பங்கள் மன நிறைவுடன் வாழ்வதற்கு பொறுப்புணர்வுடன் படைப்புகளை - பராமரித்தல் வேண்டும்.
- பொருளாதார முன்னேற்றத்தால், சூழலில் மாற்றங்கள் ஏற்படும்போது, குடும்பங்கள் படைப்பு - பராமரிப்பில் பங்களித்தல் அவசியம்.
- படைப்பு - பராமரிப்பு அறம் சார்ந்த நடவடிக்கையாதலால் அன்றாடம் குடும்பங்களாக கலந்துரையாடி பிரார்த்தனையில் ஈடுபடவேண்டும்.

## செயற்பாடு

1. நான் “சேகரின் வீட்டுத்தோட்டத்தில், வெட்டி வீழ்த்தப்பட்ட மரம் என் கண்ணீர் கதையைக் கேளுங்கள். . . .” படைப்பு - பராமரிப்பு அடிப்படையில் இச்சுயசரிதையைப் பூர்த்திசெய்யுங்கள்.
2. படைப்புகளைப் பராமரிக்கும் பணியிலீடுபட்டிருக்கும் சில இயக்கங்களின் நிறுவனங்களின் பெயர்களைத் தேடிப்பெறுங்கள். அவற்றின் பணிகளை கேட்டறியுங்கள்.
3. கடவுளின் படைப்புகளைப் பராமரித்தல் தொடர்பான ஒரு குடும்ப மன்றாடல் எழுதுக.

4. "பசுமை இயக்கமும், கிறிஸ்தவ குடும்பங்களும்" பாசறைக்குச் சமூகமளித்த குடும்பங்கள், படைப்புப் பராமரிப்புக்காக முன்வைத்த சில கருத்துகள் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றை பின்வரும் தலைப்புகளின் கீழ் வகைப்படுத்துக.

1. வீட்டுக்கழிவகற்றல்
2. தாவரப்பராமரிப்பு
3. நுகர்வுத்தெரிவு
4. சக்தி பயன்பாடு
5. விலங்குப் பராமரிப்பு
6. மீள்சுழற்சி
7. விழிப்புணர்ச்சி

தேவையற்று இயங்கும் மின் சாதனங்களை நிறுத்தி வைத்தல்

சூழல் நட்புறவான குளிரூட்டி பாவித்தல்.

கூட்டுப்பசளை தயாரித்தல்.

பொலித்தீன் பைகளுக்குப் பதிலாய் கடதாசி, ஓலை, சீலைப் பைகள் பாவித்தல்.

பறவைகளுக்கு ஒரு பங்கு பழங்களை மரத்தில் விட்டு வைத்தல்.

தாவரங்களுக்கு நீர் ஊற்றி வளர்த்தல்.

பொலித்தீன் பைகளை ஒரு தடவைக்கு மேல் பாவித்து உற்பத்தியை குறைத்தல்.

பழைய கடதாசி, கண்ணாடிப் போத்தல்,தகரப்பேணிகளை சேகரித்து மீள் சுழற்சி நிலையத்துக்கு எடுத்து செல்லல்.

நல்லினத்தாவரங்கள், விலங்குகளை விருத்தி செய்தல்.

தேவையற்ற முறையில் தாவரங்கள் அழித்தலை தவிர்த்தல்.

அயலில் உள்ள குடும்பங்களுக்கு படைப்பு பாதுகாப்பு பற்றி எடுத்துரைத்தல்.

பொலித்தீன் தாள் பொதியிடாத மரக்கறிகளை கொள்வனவு செய்தல்.

படைப்பு - பராமரிப்பு கலந்துரையாடல் பிரார்த்தனைகளை ஒழுங்கு செய்தல்.

மரம் நடுகையில் ஈடுபடுதல்.